மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 13/2025**

வா.சா. 1, அருஞ்சுனை செல்வம், S/o முருகன்
நாள்: 18.03.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு எனது வழக்கறிஞருக்கு விவரம் தெரிவித்தது நான் தான் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் வாங்கிய ஆவணங்களின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடன் பிறந்த நபர்கள் யாரெல்லாம் என்றால் அக்கா ஒருவர். அவர் பெயர் ராஜேஸ்வரி. 2வது வாதி வழக்கு சொத்துக்கள் ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் மீனாட்சி நாடார் என்பவரின் பெயரில் இருந்தது.

2) மேற்படி மீனாட்சிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 வாரிசுகள். வாரிசுகளின் பெயர்கள் பாலகிருஷ்ணன், முத்துகிருஷ்ணன் மற்றும் கிருஷ்ணசாமி என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்களை தவிர்த்து மீனாட்சி வேறு சில சொத்துக்களையும் வைத்திருந்தார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி மீனாட்சிக்கு வழக்குச் சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்களும் வைத்திருந்தார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி மீனாட்சி அவர்களின் வாரிசுகள் கிரையம் கொடுப்பதற்கு முன்பு சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய தகப்பனார் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக என்னிடம் தெரிவித்து அதன் மூலம் நான் தெரிந்து கொண்டேன்.

3) வழக்குரையில் பாகப்பிரிவினை மூலம் யாருக்கு எந்த சொத்துக்கள் கிடைக்கப்பெற்று அதனை என்னுடைய தகப்பனார் கிரயம் பெற்றதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். வா.சா.ஆ.1 ஆவணம் என்னுடைய தகப்பனார் 1993 வது வருடத்தில் கிரையம் பெற்று ஆவணம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் பாலகிருஷ்ணன் என்பவர் மூலம் எனது தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ஆவணத்தை எழுதிக் கொடுத்த நபருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்ததாக எதுவும் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. பூர்வீக சொத்து என்றுதான் காண்பிக்கப்பட்டுள்ளது.

4) வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துக்கான சர்வே எண் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் 930/2. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டச் சொத்து வழக்குரை 2 வது தபசிலாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்குரையில் 2 வது தபசில் சொத்துக்கான சர்வே எண் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்குரையில் 2 வது தபசில் சொத்துக்கான சர்வே எண் 925/1 பா என காண்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துக்கான சர்வே எண்ணும், பிராது 2 வது தவசில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கான சர்வே எண்ணும் வெவ்வேறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பிராது 2 வது தபசில் சொத்துக்கு தற்போதைய சர்வே எண் 1821/45 என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

5) 2 வது தபசில் சொத்துக்கும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான்கு மால் விபரங்கள் சரியாக உள்ளது. நான்கு மால் விபரங்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஆவணத்தை எழுதிக் கொடுத்த நபருக்கு சொத்தானது அவருடைய பாகத்துக்கு கிடைத்ததாக எங்கேயும் சொல்லியுள்ளாரா என்று சொன்னால் சொல்லவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட சொத்துக்கான சர்வே எண்

என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் 930/2. வழக்குரையில் 1வது தபசில் சொத்துக்கான சர்வே எண் 925/1 என காண்பிக்கப்பட்டுள்ளது. கிரைய ஆவணங்களின்படி வழக்குரை 1 மற்றும் 2 சொத்துக்களுக்கான சர்வே எண் 930/2 என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

6) பிரதிவாதிகளின் சொத்துக்கும் இந்த வழக்குரை கண்ட சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்களுக்கான சர்வே என்னும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கான சர்வே எண் வெவ்வேறானது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களுக்கான வில்லங்கச் சான்றிதழை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் சமர்ப்பித்துள்ளேன். வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் பட்டா தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் கிரையம் பெற்ற பின்பு கிரையம் பெற்ற சொத்துகளுக்கு அவர் பெயரில் பட்டா பெறுவதற்கு எந்த முயற்சியாவது எடுத்தாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

7) எனது தகப்பனார் கிரையம் பெறும் பொழுது வழக்கு சொத்துக்களுக்கான பட்டா குறித்து எதுவும் கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனாருக்கு கிரையம் செய்து கொடுத்த பாலகிருஷ்ணன் என்பவர் தற்பொழுது உயிருடன் இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். அதுபோல எனது தகப்பனார் கிரையம் பெற்ற மற்றொரு உரிமையாளரான கிருஷ்ணசாமி என்பவர் இறந்துவிட்டார் என்றும் அவருடைய வாரிசுகள் உயிருடன் இருக்கிறார்கள் என்றும் சொன்னால் சரிதான். தீர்வை ரசீது 2022-2023 வருடத்திற்குரிய ரசீது மட்டும்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

8) வழக்கு சொத்துக்களில் உள்ள கட்டுமானத்திற்கு வரைபட அனுமதி எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வேறு இடத்தில் உள்ள கடைக்கு வாங்கிய ரசீதினை வழக்கு சொத்துக்கான ரசீது

என்று இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கும், ஆவணத்தின் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்துகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து சர்வே எண் 930/2ல் அமைந்துள்ளது என்றும், எனது தகப்பனார் கிரயம் பெற்ற சொத்துகளுக்கு நான்கு எல்லைகள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் இருப்பதாக சொல்லும் கடைக்கு ஊராட்சியில் இருந்து பெறப்பட்ட அனுமதி ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

9) வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் எனது தகப்பனாருக்கு எழுதிக் கொடுத்த கிரையத்தாரர்களின் சகோதரரான முத்துகிருஷ்ணன் என்பவரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண் 1821ல் கண்ட சொத்தானது முத்துகிருஷ்ணனுக்கு ஒதுக்கப்பட்ட பாகச் சொத்து என்று சொன்னால் சரியல்ல. பாலகிருஷ்ணன் மற்றும் முத்து கிருஷ்ணனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் சர்வே எண் 930ல் அமைந்துள்ளது என்றும், 1821ல் அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

10) முத்துகிருஷ்ணன் பாகத்துக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து அவர் அவருடைய பெயரில் பட்டா பெற்று, இந்த வழக்கில் உள்ள 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு உரிமை மாற்றம் செய்து கொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 3வது பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்த வழக்கு மூலமும் எனக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு

சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஓம்/—எம்.இராமநாதன்/—
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு